**மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைகள் செயற்குழுக்ம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைகள் செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கலாக 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் உறுப்புறையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2** 2022 கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் 17 கமநல சேவைகள் செயற்குழுவிற்குரியவாறு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த அபிப்பிரயத்திற்கு போதுமான குறைபாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான வெளிப்படுத்தல்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல சேவைகள் செயற்குழுக்களுக்கான காணிகள் அலுவலக கட்டிடங்கள் உரக் களஞ்சியசாலைகள் மற்றும் விற்பனை நிலையம் என்பனவற்றின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிகளை கையேற்பு செய்து அனைத்து நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆயித்தியமலை கமநல அபிவிருத்தி செயற்குழுவில் காணப்படுகின்ற 03 கணினித் தொகுதிகள், 04 புல்வெட்டும் இயந்திரங்கள் , 03 சக்தி தெளிப்பான்கள் 04 நெல் நாட்டும் இயந்திரங்கள் 04 நெல்களை யெடுப்பான்கள் (நேரடி நெல் சீடர்கள்) 01 உளுந்து தோல் நீக்கி 01 டோசர் இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கடப்பட்டிருக்கவில்லை | ஏதிர்காலத்தில் பெறுமதிகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை பெறுமதியை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆயித்தியமலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினர்களின் இரண்டு சில்லு உழவு இயந்திர விற்பனைக்கான வருமதியாளர் ரூபா 642,134 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | இரண்டு சில்லு உழவு இயந்திர கட்டுப்பணமானது அறவிடப்பட்டு ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். எதிர்காலத்தில் பதிவுகளை மேற்கொள்ள நடடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுவில் காணப்படுகின்ற 01 கணினித் தொகுதி, 01 டோசர் இயந்திரம், 11 புல்வெட்டும் இயந்திரங்கள், 01 போட்டோ பிரதி இயந்திரம், 04 சக்தி தெளிப்பான்கள், 03 கிருமிநாசினி தெளிப்பான்கள், 32 மின்னியல் தெளிப்பான்கள், 02 கணனி திரைகள், 02 தடையில்லா சக்தி மூலம், 01 திசைவிகாட்டி, 01 வைபை இசைவாக்கி, 01 பாதுகாப்பு பெட்டகம், 01 வன்பூட்டு மற்றும் 01 விவசாய வங்கி கரும பீடம் என்பவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | மண்டபத்தடி கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கான நிலையான வைப்புக்களிலிருந்து பெறப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 637,175 தொகை கணிப்பிட்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆண்டுக்கான இலாபம் மற்றும் பெற வேண்டியவைகள் அத் தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | இனிவரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கு மீளாய்வாண்டில் 05 வகையான 27 உபகரணத்துண்டங்கள் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை அனைத்தும் பெறுமதியிடப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருகின்ற நிதியாண்டில் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | இரண்டு கமநல அபிவிருத்தி செயற்குழுக்களின் 2016 ஆம் ஆண்டு ரூபா 589,955 தொகைக்கு முடிவுறுத்தப்பட்ட பசுமை இல்லம், இரும்பு கூடாரம் மற்றும் கட்டுமானம் என்பன கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2008 ஆம் ஆண்டு வன்செயலினால் பாதிப்படைந்த ரூபா 459,562 பெறுமதியான 66 சொத்துக்கள் தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளினை மேற்கொண்டு அவற்றை நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இற்கு அமைய அவற்றை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவை நீண்ட காலமாக நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | பதிவழிப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இற்கு அமைய அவற்றை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | கல்லடி கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கு உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,067,900 பெறுமதியான தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூட உபகரணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | தாந்தாமலை கமநல அபிவிருத்தி செயற்குழுவின் 18,160 கிலோ கிராம் இலவச சேதனைப்பசளை மற்றும் 4,472 லீட்டர் இலவச திரவ உரம் என்பவைகளின் பெறுமதிகள் இருப்புக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எத எதிர்வரும் நிதி ஆண்டில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.ிர்வரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்**

| விடயங்கள் | நிதிக்கூற்றுகளின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி (ரூபா) | வேறுபாடு (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| உள்ளீடுகள் விற்பனை வருமதி | 310,550 | 385,000 | 74,450 | எதிர்வரும் நிதி ஆண்டில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | வேறுபாட்டை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| புலமைப் பரிசில் நிதியம் | 75,367 | 264,691 | 189,324 | கொடுக்க வேண்டி உள்ளதால் நடைமுறை பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது. | வேறுபாட்டை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.3 அதிகாரம் இல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காத்தான்குடி செயற்குழுவினால் முறையான அங்கீகாரமின்றி சேகரிக்கப்பட்ட நிதி குத்தகை வாடகையானது ஒவ்வொரு வருடமும் அதன் நிதியறிக்கைகளில் வருமானமாக காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, இவ்வாறான வருமானம் செயற்குழுவின் செலவினங்களை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கூட்டுமொத்தம் ரூ. 1.5 மில்லியன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் ஆறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை வங்கியில் நிலையான வைப்புத்தொகையின் கீழ் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் நிலையான வைப்புத்தொகைக்கான வட்டி வைப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து செயற்குழுவின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு செயற்குழுவின் செலவுகளை ஈடுசெய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | அரச காணி கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக இந் நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | அரச காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இந்நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | அரச காணி கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பழுகாமம் கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கு கையளிக்கப்பட்டிராத 0.6514 ஹெக்டேயர் அரச காணியினை உதவி கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளரினால் 02 தனி நபர்களுக்கு 30 வருடகால குத்தகை ஒப்பந்தப்படி அரச காணி கட்டளைச்சட்டத்திற்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. | உதவி ஆணையாளரின் அனுமதியுடன் இக்காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது | அரச காணி கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| | விடயங்கள் | முகாமைத் துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களிற்கு ஜப்பான் யென் உதவித்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் | தோகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கோ அல்லது அவற்றினை மீள சுவீகரித்து கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மூன்று கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2010 ஆம் ஆண்டில் நிலை பேறான விவசாய முகாமைத் திட்டத்தின் கீழ் சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பம்பிகள் தவணை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | குறித்த தொகைகளை மீள அறவிடு வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2017 தொடக்கம் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்கனவே கடன்நிலுவை உள்ள கடன் பட்டோரினையும் உள்ளடக்கி மேலதிக கடன் விற்பனை மேற்கொள்ளப்பட்ட ரூபா 703,094 தொகை மீளாய்வாண்டு வரை அறவிடப் பட்டிருக்கவில்லை. | குறித்த தொகைகளை மீள அறவிடு வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மண்டூர் கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2018 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான உரம் மற்றும் இரசாயணம் கடன் விற்பனை கூட்டுமொத்தம் 1.764,794 தொகை தொடர்பில் அவர்களிடமிருந்து கடன் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | குறித்த தொகைகளை மீள அறவிடு வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | விவசாயிகளிடம் நிலுவையை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.5 கணக்காய்வுக்காக எழுத்து மூலமாக சாட்சிகள் இல்லாமை

| | **விடயங்கள்** | **தொகை**<br>(ரூபா) | **வழங்கப்படாத கணக்காய்வு சாட்சி** | **முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 10,148,427 | நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் | நிலையான சொத்துப் பதிவேடு பேண நடவடிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு பேண |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆவணங்கள் | எடுக்கப்படும் | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டியவை | 3,881,931 | கடன்பட்டோர் பட்டியல், பதிவேடு, உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பகுப்பாய்வு | கடன்பட்டோர் பட்டியல், பதிவேடு, உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பகுப்பாய்வு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் பட்டியல், பதிவேடு, உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பகுப்பாய்வு தயாரிப்பதற்கு மற்றும் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 4,785,304 | தொடர்புடைய சான்றாவணங்கள், செண்மதியாளர் பதிவேடு மற்றும் மூல ஏடுகள். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | தொடர்புடைய சான்றாவணங்கள், செண்மதியாளர் பதிவேடு மற்றும் மூல ஏடுகள் பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை.**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள்** | **இணக்கமின்மை** | **முகாமைத் துவத்தின் கருத்து வெளிப்பாடுகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**<br>---------------------- | | | |
| (i) | 110 | இருப்பு மற்றும் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு 17 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களினால் பேணப்பட்டிருக்க வில்லை. | இருப்பு மற்றும் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேண நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இருப்பு மற்றும் இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (ii) | 262(ii) | 03 கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் கொடுப்பனவுச் சிட்டைகள் மற்றும் ஏனைய துணை ஆவணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டதென முத்திரை இடப்படவில்லை. | கொடுப்பனவுச் சிட்டைகள் மற்றும் ஏனைய துணை ஆவணங்கள் அனைத்தும் கொடுப்பனவு செய்யப்பட்டதென முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 454(2) | 09 கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் மின்சாரப் பொருத்திகளுக்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் பதிவேடுகள் பேண நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மின்சாரப் பொருத்திகள் பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 880 | 17 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களில் கடமையாற்றும் நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள உத்தியோ கத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | கமநல அபிவிருத்தி திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின்** ---------------------- | | | |
| (i) | 44(1) பிரிவு | கமக்காரர் அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் கணக்குகள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 17 கமநல அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கமநல அமைப்புக்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கமநல அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 53 (1) பிரிவு | 17 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களில் 03 வருடத்திற்கு ஒரு தடவை காணி இடாப்பு (நெற்காணி பதிவேடு) மீளாய்வு செய்யப்பட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | வயற்காணி பதிவேடுகள் இனிவரும் காலங்களில் 03 வருடத்திற்கு ஒருமுறை மீளாய்வு செய்து கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வயற்காணி பதிவேடுகள் மீளாய்வு செய்து அத்தாட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதிப் பெறுபேறுகள் / விளைவுகள்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தினது 17 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களின் தொழிற்பாட்டு முடிவுகள் ரூபா 8,767,326 மேலதிகம் ஆக இருப்பதுடன் இதனுடன் தொடர்புடைய கடந்த வருடத்தின் மேலதிகம் ரூபா 8,393,661 ஆகும். இதற்கமைய, நிதி செயலுற்றுகை ரூபா 373,665 தொகையினால் அதிகரித்திருந்தது. இந்த வளர்ச்சிக்கு விவசாய காணிகளின் ஏக்கர் வரி வருமானம், பசளை விற்பனை வருமானம் மற்றும் செயற்குழுக்களின் நிலையான வைப்பிலிருந்தான வட்டி வருமானம் என்பனவற்றின் அதிகரிப்பு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

(ஆ) மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தினது 17 கமநல வங்கிகளின் செயற்பாட்டு முடிவுகள் ரூபா 3,136,839 மேலதிகம் ஆக இருப்பதுடன் இதனுடன் தொடர்புடைய கடந்த வருடத்தின் மேலதிகம் ரூபா 3,309,447 ஆகும். இதற்கமைய, நிதி செயலாற்றுகை ரூபா 172,607 தொகையினால் குறைந்திருந்தது. இந்த பின்னடைவுக்கு கடன்களுக்கான வட்டி வீதங்கள் 7 % ஆக குறைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உரக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 2 மில்லியன் தொகை உரக் கொள்வனவு செயற்பாடுகள் முடிவடைந்த போதிலும் வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுக்கணக்கிற்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விநியோகத்தின் போது உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறிதடத தொகையினை கமநல அபிவிருத்தி செயற்குழுக்கணக்கிற்கு மீள பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016/2017 பெரும்போகத்தில் எஞ்சிய உரங்களை விற்பனை செய்தமைக்காக 2019 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு வரையப்பட்ட ரூபா 1.3 மில்லியன் தொகை காசோலையானது கணக்காய்வு திகதி வரைக்கும் வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | காசோலையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடன் கொடுத்தோர் பட்டியலில் நீண்ட காலமாக காட்டப்பட்டுள்ள 17 சென்மதியாளர்கள் மீதி ரூபா 1,702,001 தொகை தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்பட்டு வருகின்றது. இதனை தீர்ப்பதற்கு அல்லது பதிவழிப்பதற்கு | எதிர்வரும் காலங்களில் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சென்மதியாளர் நிலுவையை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் மீளாய்வாண்டு வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | வாழைச்சேனை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2021/2022 பெரும்போகத்தின் பின் எஞ்சியிருந்த யூரியா உரத்தினை சோளம் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ரூபா 2,244,021 தொகைக்கு விற்பனை செய்யப்படடிருந்த போதிலும் இத் தொகையினை உரச்செயலகத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளரின் அறிவுறுத்தல் கிடைக்காமையால் இத்தொகை உரச்செயலகத்திற்கு மீளச் செலுத்தப்படவில்லை. | உரிய காலத்திற்குள் பொறுப்புக்களை செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02 கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் ரூபா 475,715 தொகை பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட இரசாயனங்கள் காலாவதியடைந்துள்ள போதிலும், இதனை அழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பு செய்வதற்கு மாவட்ட ஆணையாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 102 தொடக்கம் 109 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக தாந்தாமலை கமநல அபிவிருத்தி செயற்குழுவின் சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 2,086,912 தொகைக்கு பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் கடந்த 14 வருட காலமாக அவற்றினை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணம் 102 தொடக்கம் 110 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கரடியனாறு கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 446,151 பெறுமதியுடைய சொத்துக்கள் அழிவடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும், அவை மீளாய்வாண்டு இறுதி | பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வரை
பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வாகரை மற்றும் பழுகாமம் செயற்குழுக்கள் அமைந்துள்ள காணியின் உரிமையை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை கமநல அபிவிருத்தி செயற்குழுக்களினால் கணக்காய்வு திகதியான 2023 மே 11 வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காணியின் உரிமையை பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 53(1) இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் கமத்தொழில் காணி இடாப்பு மீள்திருத்தத்திற்கு அமைய 6,925 விவசாயிகளுக்கு சொந்தமான 2,972 ஏக்கர் வயற்காணிகள் மாத்திரம் பழுகாமம் கமநல அபிவிருத்தி செயற்குழுவின் கமத்தொழில் காணி இடாப்பில் பதியப்பட்டுள்ளன. | பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமம் கிடைக்கப் பெறாதாவர்களின் காணிகள் ஆவணங்கள் இன்மையால் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கிரான் கமநல அபிவிருத்தி செயற்குழுவின் 13 கிராம சேவகர் பிரிவுகளில் மொத்தமாக 24இ404 ஏக்கர் வயற்காணி காணப்படுகின்ற போதும் இதில் மொத்தமாக 8,516 ஏக்கர் காணிகளே வயற்காணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய காணிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்து ஏனைய காணிகளை பதிதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வயற்காணிகளை பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகளின் பிரிவு 224 (I) இன்படி, இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு திணைக்களத்திற்கும் அரச காணிகளை வழங்குவதற்கும் காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியை மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளரால் பெற வேண்டும். பிரதேச செயலகத்திற்குட்பட்ட 17 செயற்குழுக்கள் 1975 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்ற | ஆணையாளர் நாயகத்தினால் ஒப்பமிட்டு அனுப்பப்பட்ட கடிதம் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணிக்கான உரிமை சட்டரீதியாக பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 40 வருடங்களாக அரச காணிக்கான உரிமை சட்டரீதியாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 53(1) இன் பிரகாரம் தாந்தாமலை மற்றும் வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2020 ஆம் ஆண்டின் மீள்திருத்தத்தின் போது வயல் காணியின் பொருட்டான 10இ689 விவசாயிகளின் 3இ040 ஏக்கர் காணிகள் ஆவணங்களின் குறைபாடு காரணமாக வயற்காணிபதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் காணப்படுகின்றன. | வயற்காணிகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | விவசாயிகளின் வயற்காணிகளை பதிவு செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆயித்தியமலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2022 சிறு போகத்தில் 2,623.1 ஹெக்டயர்களுக்கான, 50 நாட்களுக்கு குறைவான மற்றும் 50 நாட்களுக்கு கூடிய நெற்பயிர்களுக்கான யூரியா உரம் கோரப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,463,965 தொகையான 142.55 மெட்ரிக் தொன் யூரியா உரம் 30 நாட்கள் கால தாமதத்தின் பின்னரே கிடைக்கப்பெற்றது. இத்தாமதத்தின் விளைவாக நெற்பயிர்ச் செய்கைக்கு உரிய காலத்தில் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படவில்லை. இதன் விளைவாக ரூபா 2,857,680 பெறுமதி கொண்ட 117.6 மெட்ரிக் தொன் யூரியா உரம் மீளாய்வாண்டில் மேலதிகமாக பெறப்படடிருந்தன. | மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களை விட முன்னர் நெல்பயிடுதல் ஆரம்பமாகின்றது. அத்துடன் உரத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தினால், அவை காலம் தாழ்த்தி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. | விவசாயிகளின் தேவை மதிப்பீட்டு முறைமை மூலம் விவசாயிகளுக்கு உரியகாலப் பகுதியில் உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வாகரை கமநல அபிவிருத்தி செயற்குழுவின் கடந்த 05 வருடங்களின் பதிவுகளின் பிரகாரம் வயற் காணி பதிவேட்டில் உள்ள காணியின் அளவு 23,610 ஏக்கர்களாக காணப்பட்ட | எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. | தரவுகளை பேண உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், வேளான்மை செய்யப்பட்டு உரம் வழங்கப்பட்ட காணியின் அளவு 17,454.25 ஏக்கர்கள்ளாக காணப்பட்டதன் விளைவாக 6,155.75 ஏக்கர் வயற்காணி நெற்பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் செயற்குழுவினால் நெற்செய்கை செய்யப்படாத வயற்காணிகளின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி செயற்குழுவின் 2021/2022 பெரும் போக விவசாயிகளுக்கு லீற்றர் 1,451 சேதன உர திரவப் பசளைகள் மற்றும் 2022 சிறு போக விவசாயிகளுக்கு லீற்றர் 182 சேதன உர திரவ பசளைகளும் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும், அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், குறித்த சேதனப்பசளைகள் பயன்படுத்தப்படாமை தொடர்பாக கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் நெல் பயிரிடுகை முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட்டமையினாலும்,குறித்த உரங்கள் காலதாமதத்துடன் கிடைக்கப்பெற்றமையினாலும் அவை கால தாமதத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. | உரிய காலத்தில் விவசாயிகள் நெல் விதைப்பை மேற்கொள்ளும் வகையில் மானிய உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஏறாவூர் கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2022/2023 பெரும்போகத்தில் விற்பனை செய்யப்பட்ட தொகைகள் உரிய காலத்தில் தொடர்புடைய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 22,961,560 தொகை பொறுப்பாக மீளாய்வாண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உர விற்பனை மூலம் பெறப்படும் காசு காலம் தாழ்த்தாது செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (உ) | கிரான் கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் அறுவடையின் பின் முற்றாக செலுத்தி தீர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முன்னைய ஆண்டுகளில் 96 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த விவசாய இரசாயனக்கடன், யூரியா கடன் மற்றும் திரவ சேதனப்பசளைக் கடன்களின் அறவிடப்பட வேண்டிய | கடன்களுக்கான கடன் பேரேடுகள் பேணப்பட்டு வருவதுடன் எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீதியான ரூபா 3,363,924 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும், வழங்கப்பட்டிருந்த கடன்களுக்கான கடன் பேரேடுகளும் செயற்குழுவினால் பேணப்பட்டிருக்கவில்லை. | | |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகளின் பிரிவு 224 (7) இன் படி, குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அரச திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட அரச காணி, காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது. காத்தான்குடி கமநல அபிவிருத்தி குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அரச காணி விவசாயம் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், மேற்படி விதிமுறைக்கு மாறாக விவசாயம் சாராத வியாபார நடவடிக்கைகளுக்காக நான்கு (04) வர்த்தகர்களுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமத்தொழில் அமைச்சின் கடித இலக்கம் 07/01/01/2020 Sep/Stock இன் படி 50 Kg உரம் ரூபா 1,500 இற்கும் ஆணையாளர் நாயகத்தின் 16/12/2021 ஆம் திகதிய கடிதத்தின் படி ரூபா 6,500 இற்கும் விற்பனை செய்யப்பட்டது. | சீராக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 குறைவான நிதிப் பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வறிய விவசாயிகளின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக 04 கமநல அமைப்பு பிரதிநிதிகளிடமிருந்து நன்கொடையாக பெற்று நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் அதன் மூலம் இதுவரை உழைக்கப்பட்ட வட்டி வருமானம் என்பவற்றிலிருந்து நீண்ட காலமாக எவ்வித புலமைப்பரிசில்களும் | நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, கூட்டுமொத்தம் ரூபா 2,014,948 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**3.7 பாவனையற்ற / குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேதனப்பசளை உற்பத்திற்காக கிழக்கு மாகண ஆளுனரினால் 04 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களுக்கு சொப்பர் இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் சேதனைப்பசளை உற்பத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படவோ அல்லது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படவோ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக இயந்திரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் பாவனையற்றிருந்தது. | ஆளுனருக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு 05 கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டில் ரூபா 1,498,000 பெறுமதியில் பச்சை வீடு அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும் இது எதுவிதமான உற்பத்தி செயற்பாடுகளுமின்றி பயனற்று காணப்படுகின்றது. இருப்பினும் இந்த ஒதுக்கீட்டினை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கையினை விருத்தி செய்ய செயற்குழு தவறியிருந்தது. | குறித்த செயற்திட்டத்திற்க மைவாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தையும் குறிக்கோளினையும் அடைய முடியவில்லை. | பச்சை வீட்டினை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | மண்டபத்தடி கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தம் ரூபா 2,895,000 தொகைக்கு உரம் கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்படாது கூட்டுமொத்தம் ரூபா 2,875,700 பெறுமதியான உரம் களஞ்சியசாலையில் காணப்பட்டது. இது மொத்த கொள்வனவில் 99 சதவீதமாகும். | மீள் கொள்வனவு தொடர்பில் செயற்குழு அறிந்திருக்கவில்லை. | அவற்றை விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மண்டபத்தடி கமநல அபிவிருத்தி செயற்குழுவிற்கு சொந்தமான டோசர் இயந்திரமானது 2013 ஆண்டிலிருந்து பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன் அவ் இயந்திரத்திலிருந்து எந்தவொரு வருமானமும் 2013 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை அதற்கு ரூபா 6,000,000 தேய்மானம் இடப்பட்டிருந்தது. இதன் விளைவாக செயற்குழுவின் திரண்ட நிதியானது அத்தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | குறித்த இயந்திரம் திருத்தம் மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றது.மற்றும் அதனை கால்நடை அபிவிருத்தி சபைக்கு மாற்றம் செய்வதற்கான ஆணையாளர் நாயகத்தின் அனுமதியை கோரும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | குறித்த டோசர் இயந்திரத்தினை பழுதுபார்ப்பதற்கு அல்லது வேறு நிறுவனத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.8 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் 08 கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுகை திட்டம் தயாரிக்கப்படும் | பிரதான பெறுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு முறனாக வாழைச்சேனை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் மீளாய்வாண்டில் ரூபா 3,301,700 தொகைக்கு நெல் கட்டும் பைகள், ரூபா 448,400 தொகைக்கு பழமரக்கன்றுகள் மற்றும் ரூபா 735,000 தொகைக்கு டிஸ்கவரி உரம் என்பன நேரடி கொள்வனவு முறையில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. | எதிர்வரும் காலங்களில் பெறுகைகள் வழிகாட்டல் முறைமை பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டி முறைமையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் பெறுகை வழிகாட்டி முறைமை பின்பற்றபடாமல் ரூபா 1,515,450 பெறுமதியுடைய விதை நெல், ரூபா 1,930,000 பெறுமதியடைய யூரியா மற்றும் ரூபா 3,330,750 பெறுமதியுடைய விவசாய | எதிர்வரும் காலங்களில் பெறுகை வழிகாட்டி முறைமை பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

உள்ளீடுகள் செயற்குழுவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.9 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| களுவாஞ்சிக்குடி கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் அதிகாரப் பரப்பெல்லைக்குள் காணப்படுகின்ற குளங்களுக்கு பொருத்துவதற்காக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 15 உயர மானிகளில் 04 உயரமானிகள் கணக்காய்வுத் திகதி வரை பொருத்தப் பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக அனர்த்தகால அளவீட்டு அறிக்கைகளை வழங்கமுடியாமல் போவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டிருந்தது. | உயரமானிகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் பொருத்தப்பட்டு அறிக்கைகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.10 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் 17 கமநல அபிவிருத்தி செயற்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக மனிதவளம் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படுவதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரம் மாவட்ட காரியாலயத்தில் உள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். | பதவியணியினர் விபரங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 04. வகைகூறலும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|
| ஆரையம்பதி கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பாதீட்டு விபரம் உள்ளபடியான பெறுமதி ஒப்பீடு மற்றும் அவை தொடர்பான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் கீழ் சமர்ப்பிக்க வேண்டிய வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் காட்டப்படும். | வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு 17 கமநல அபிவிருத்தி செயற்குழுக்களினால் செயலாற்றுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் செயலாற்றுகை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 05. கமநல வங்கி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 04/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.4.6 மற்றும் 08/2019 ஆம் இலக்கமும் கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம், கொக்கட்டிச்சோலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிறுபோக மற்றும் பெரும்போக பயிர்செய்கைகளுக்காக 46 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா 2,367,200 தொகை மீளாய்வாண்டு வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றுநிருபத்தின் பிரகாரம், உரிய காலத்தினுள் விவசாயக் கடன் மற்றும் வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கமநல வங்கி தொடர்பான 4/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 3.2 (viii) இன் பிரகாரம், விவசாயி பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் கடன் தொகையில் 10 சதவீதம் கமநல வங்கியின் குழு சேமிப்பு கணக்கில் பேணியிருத்தல் வேண்டும். எனினும், இத் தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்படாது வந்தாறுமூலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் சிறுபோகத்திற்கென 36 விவசாயிகளுக்கு (தலா ரூபா 30,000) 1,080,000 தொகையும், பெரும் போகத்திற்காக 125 | எதிர்காலத்தில் கடன் வழங்கும் நடவடிக்கை பின்பற்றப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளுக்கு ரூபா 3,750,000 தொகையும் கடனாக மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 4/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சுற்றறிக்கையின் பிரிவு 3.4.6 இன் பிரகாரம், 2019/2020 பெரும்போகம் தொடக்கம் 2021/2022 சிறு போகம் வரைக்கும் வந்தாறுமூலை கமநல அபிவிருத்தி செயற்குழுவினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் ரூபா 429,500 தொகை மற்றும் அவற்றிறிகான வட்டி என்பன உரிய காலத்தினுள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த விவசாயிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணக்க சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | 04/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், கடன் நிலுவை மற்றும் அவற்றுக்கான வட்டி என்பன் அறவிடப்படல் வேண்டும். |

## 06. முறைமையும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்து வெளிப்பாடுகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 இன் பிரகாரம் அனைத்து அரச ஊழியர்களும் தங்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்லுகையினை விரல் அடையாள இயந்திர பதிவின் ஊடாக உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். எனினும், ஒவ்வொரு செயற்குழுவிற்கும் ரூபா 16,500 தொகை கிரயத்தில் கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள போதிலும், செயற்குழுவின் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறுகை அதனூடாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விரல் அடையாள இயந்திரம் மூலம் ஊழியர்களது உள்வருகை மற்றும் வெளிச் செல்கையினை உறுதிப்படுத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், உள்வருகை மற்றும் வெளிச்செல்கை என்பவைகள் விரல் அடையாள இயநிர பதிவின் ஊடாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |